

“திராவிட பொங்கல் விழா 2026 விளையாட்டுப் போட்டிகள் விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம், வ.பகண்டை ஊராட்சியில் விக்கிரவாண்டி கிழக்கு, விக்கிரவாண்டி மேற்கு, விக்கிரவாண்டி மத்திய, விக்கிரவாண்டி வடக்கு, விக்கிரவாண்டி பேரூராட்சி சார்பில் நடைபெறும் இரவு பகல் மின்னொளி மாபெரும் கைப்பந்து போட்டியை விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், செயற்குழு உறுப்பினர் அப்துல் சலாம், பொதுக்குழு உறுப்பினர் காடுவெட்டி ஏழுமலை, ஒன்றிய கழக செயலாளர்கள் ஜெய.ரவிதுரை, வேம்பி.ஜெ.ரவி, க.மும்மூர்த்தி, ஜெ.ஜெயபால், வே.கில்பர்ட் ராஜ் , நகர செயலாளர் நயினா முகம்மது, ஒன்றிய குழு தலைவர் சங்கீதா அரசி, மாவட்ட கவுன்சிலர் மீனா வெங்கடேசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ச.பாலாஜி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அமைப்பாளர் ரா.சதீஷ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் தட்சிணாமூர்த்தி, பார்த்தசாரதி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பாரதி, ஒன்றிய கவுன்சிலர் கஸ்தூரி பாண்டியன், ஊராட்சி மன்ற தலைவர் சீனுவாசன், கிளைச் செயலாளர் பாண்டியன் , ரமணன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்,எல்,ஏ., அறிவிப்பு!



இராமநாதபுரம், ஜன.11-

இராமநாதபுரம் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று (11.01.2026-ஞாயிற்றுக்கிழமை) மாலை 3.15 மணி அளவில் பரமக்குடி, ஏ.பி. ஷா மகாலில் மாவட்ட அவைத்தலைவர் வ.சத்திய மூர்த்தி தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மண்டல தேர்தல் பொறுப்பாளர் நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு , வனத் துறை அமைச்சர், கழக தேர்தல் பணிக் குழு தலைவர் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன், மாவட்டக் கழக பொருளாளர் செ.முருகேசன் எம்.எல்.ஏ., தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர்கள் மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கொடி சந்திரசேகர் (பரமக்குடி தொகுதி பார்வையாளர்), மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் அருண் (திருவாடனை தொகுதி பார்வையாளர்), புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் மருத்துவர் எஸ்.சுதர்சன் (இராமநாதபுரம் தொகுதி பார்வையாளர்), விருதுநகர் தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வேல்முருகன் (முதுகுளத்தூர் தொகுதி பார்வையாளர்) ஆகியோர் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள். ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலைக் குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் ¬1. ஜனவரி 17 அன்று தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் மணிமண்டபம் திறப்பு விழா கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வருகை.

2. கழக ஆக்கப்பணிகள்.

### செஞ்சி ஒன்றியம் – ஆலம்பூண்டி, சத்தியமங்கலம், செம்மேடு, கோணை ஆகிய ஊராட்சிகளில்

# 3744 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ. 3000 ரொக்கத்துடன் பொங்கல் பரிசு தொகுப்பு!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்,எல்,ஏ, வழங்கினார்! ஒன்றியப் பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை!

செஞ்சி, ஜன.11-

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பாக பச்சரிசி 1 கிலோ, சர்க்கரை 1 கிலோ, வேட்டி, சேலை, முழு கரும்புடன் ரூபாய் 3000 ரொக்கமாக வழங்குவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க .ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டிருந்தார். இந்தப் பொங்கல் பரிசு தொகுப்பு நேற்று முன்தினம் முதல் தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்டடு வருகிறது.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஆலம் பூண்டி, சத்தியமங்கலம், செம்மேடு, கோணை ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் வளாகத்தில் உள்ள நியாய விலைக் கடைகளில் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்குசெஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர்கள் முத்தம்மாள் சேகர், அபர்ணா ரவிசங்கர், நீலாவதி பஞ்சாட்சரம், பிருந்தா சக்தி முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன சங்கத்தின் செயலாளர்கள் விநாயக மூர்த்தி, லோகநாதன், பழனி குமார் ஆகியோர் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு ஆலம்பூண்டிநியாயவிலைக் கடையில் 637குடும்ப அட்டைதாரர்களுக்கும்,சத்திய மங்கலத்தில் 980குடும்ப அட்டைதாரர்களுக்கும், செம்மேட்டில் 815குடும்ப அட்டைதாரர்களுக்கும், அப்பம்பட்டில் 512குடும்ப அட்டைதாரர்களுக்கும், கோணையில் 800குடும்ப அட்டைதாரர்கள் என மொத்தம் 3744குடும்ப அட்டைதாரர்களுக்குஒருகிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை வேட்டி சேலை மற்றும் முழு கரும்புடன் 3 ஆயிரம் ரூபாய் ரொக்க பணம் வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன், ஒன்றிய கவுன்சிலர்கள் கேமல், டிலைட்,முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரேவதி கணேசன்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பழனி, ஒன்றிய அவைத் தலைவர்கள் வாசு, அய்யாதுரை, மோகன்,நிர்வாகிகள் ஆலம் பூண்டிசங்கர், அண்ணாமலை, ரமேஷ், சந்திரசேகர், சத்தியமங்கலம் திரு வேங்கடம்,சுப்பிரமணி சங்கர் நிக்கோலஸ் மகளிர் அணி சங்கீதா செம்மேடுவெங்கடேசன் மதுரை, கோணை காந்தி உள்ளிட்ட தொ.மு.ச. நிர்வாகிகள் துறை சார்ந்த அலுவலர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் 08/01/2026 வியாழக்கிழமை அன்று ரிஷிவந்தியம் ஊராட்சி அரியாந்தக்காவில் ரூ.13 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக் கடையினை திறந்து வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்து இனிப்புகள் வழங்கினார், இந்நிகழ்வில் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எம்.பெருமாள், ஒன்றிய குழு பெருந்தலைவர் வடிவுக்கரசி சாமி சுப்ரமணியன், மாவட்ட கவுன்சிலர் ஆதி.கு.கோவிந்தராஜ், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.ராஜு, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் செல்வகுமார், அவைத்தலைவர் கே.சுந்தரராஜன், தேர்தல் பொறுப்பாளர் வழக்கறிஞர் சீனுவாசன், ஊராட்சி மன்ற தலைவர் வினிதா மகேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டி ,சத்தியமங்கலம் ஊராட்சியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ. 3000 ரொக்கத்துடன் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சியை முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### ‘திராவிட மாடல்’ அரசின் அடுத்த அசத்தல் திட்டம்!

# மக்களின் எதிர்பார்ப்புகள், கனவுகளை அரசுடன் பகிரும் ‘உங்க கனவ சொல்லுங்க’ திட்டம்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வரவேற்பு!

**சென்னை, ஜன. 11-**

**‘திராவிட மாடல்’ அரசின் அடுத்த அசத்தல் திட்டம் மக்கள் தங்கள் எதிர்பார்ப்புகள், கனவுகளை அரசுடன் பகிரும் ‘உங்க கனவ சொல்லுங்க’ திட்டம்! உள்ளது என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வரவேற்பு தெரிவித்துள்ளது.**

**அது வருமாறு:-**



தினகரன்

ஜனவரி 10, 2026 சனிக்கிழமை

முக்கிய முன்னெடுப்பு

தமிழ்நாடு அரசு பல அசத்தல் திட்டங்களை நிறைவேற்றி வரும் வேளையில் தற்போது அடுத்த அதிரடியாக "உங்க கனவ சொல்லுங்க" திட்டத்தினை நேற்று துவக்கியுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் அமல்படுத்தப்பட்ட அரசு திட்டங்களில் பயனடைந்துள்ள பயனாளிகளின் தரவுகள் மற்றும் விவரங்களை உறுதிப்படுத்தவும், திட்டங்களின் தற்போதைய செயல்பாட்டு நிலை குறித்து பொதுமக்களின் கருத்தினை அறியவும், எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளை கண்டறியவும், அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்துகொள்ளும் திட்டம்தான் "உங்க கனவ சொல்லுங்க" திட்டம்.

தமிழ்நாட்டில் உள்ள சுமார் 1.91 கோடி கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள குடும்பங்களை சந்தித்து, அவர்கள் பயன்பெற்ற திட்டங்கள் மற்றும் கனவுகளை 50,000 தன்னார்வலர்களை ஈடுபடுத்தி கண்டறிய எடுக்கப்படும் முன்மாதிரி

தமிழ்நாடு அரசு பல அசத்தல் திட்டங்களை நிறைவேற்றி வரும் வேளையில் தற்போது அடுத்த அதிரடியாக “உங்க கனவ சொல்லுங்க” திட்டத்தினை நேற்று துவக்கியுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் அமல்படுத்தப்பட்ட அரசு திட்டங்களில் பயனடைந்துள்ள பயனாளிகளின் தரவுகள் மற்றும் விவரங்களை உறுதிப்படுத்தவும், திட்டங்களின் தற்போதைய செயல்பாட்டு நிலை குறித்து பொதுமக்களின் கருத்தினை அறியவும், எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளை கண்டறியவும், அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்து கொள்ளும் திட்டம்தான் “உங்க கனவ சொல்லுங்க” திட்டம்.

தமிழ்நாட்டில் உள்ள சுமார் 1.91 கோடி கிராமப் புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள குடும்பங்களை சந்தித்து, அவர்கள் பயன் பெற்ற திட்டங்கள் மற்றும் கனவுகளை 50,000 தன்னார்வலர்களை ஈடுபடுத்தி கண்டறிய எடுக்கப்படும் முன் மாதிரி முயற்சியாகும். தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் தன்னார்வலர்கள், இரண்டு முறை செல்வார்கள். முதல்முறை வீட்டிற்கு செல்லும்போது விண்ணப்ப படிவத்தினை குடும்ப தலைவர் அல்லது உறுப்பினர்களிடம் வழங்குவார்கள்.

அவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள அரசு திட்டங்களின் பெயர் பட்டியல் விவரங்களை அவர்களிடம் தெரிவித்து, படிவத்தினை பூர்த்திசெய்து தரும்படி கோருவர். ஒவ்வொரு வீட்டிற்கும் வழங்கப்படும் படிவத்தில், தங்களின் மூன்று முக்கிய கனவுகளை பதிவுசெய்யலாம். அத்துடன், இளம் தலைமுறையினரின் கனவுகளும் தனிப்பட்ட முறையில் கேட்டறியப்படும்.

இரண்டு நாட்களுக்கு பிறகு, தன்னார்வலர்கள், ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தினை சரி பார்த்து கைபேசி செயலியில் பதிவேற்றம் செய்வார்கள். அதன்பின்னர் அக்குடும்பத்திற்கு தனித்துவமான அடையாள எண்ணுடன்கூடிய கனவு அட்டையினை வழங்குவார்கள். இந்த அட்டை மூலம் www.uks.tn.gov.in என்ற இணையதளத்தில் தங்களது கனவு, கோரிக்கையின் நிலை குறித்து தெரிந்து கொள்ளலாம்.

2030ம் ஆண்டில் தமிழகம் எப்படிப்பட்ட மாநிலமாக இருக்க வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையுடன், நீண்டகால திட்டமிடலுக்காக இந்த கருத்துகள் கேட்கப்படுகிறது. இந்த திட்டம், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இம்மாநிலத்திற்கு வழங்கும் ஒரு முக்கியமான முன்னெடுப்பாகும்.

ஏற்கனவே, தமிழக அரசு சார்பில், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம், மகளிருக்கான விடியல் பயண திட்டம், மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம், மாணவர்களுக்கு தமிழ் புதல்வன் திட்டம், திறன் மேம்பாட்டிற்கான “நான் முதல்வன்” திட்டம், முதியோர்களுக்கு உயர்த்தப்பட்ட ஓய்வூதியம்,பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு காலை உணவு திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், “நலம் காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாம்கள், தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டம், முதியோர்களுக்கான அன்புச்சோலை திட்டம், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வீடுகளுக்கே சென்று ரேஷன் பொருட்கள் வழங்கும் திட்டம் என எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆனாலும், ஒவ்வொரு குடும்பத்திற்கும், ஒவ்வொரு நபருக்கும் தனிப்பட்ட கனவுகள் இருக்கும். தங்களுக்காகவும், குடும்பத்திற்காகவும், சமூகத்திற்காகவும், மாநிலத்திற்காகவும் மக்கள் பல்வேறு எதிர்பார்ப்புகளை வைத்திருப்பார்கள்.

அந்த வகையான எதிர்பார்ப்புகள், கனவுகள் அனைத்தையும் அரசுடன் பகிர்ந்து, அதை நிறைவேற்றவே இந்த திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மக்களின் எதிர்பார்ப்புகளை புரிந்துகொண்டு, எதிர்காலத்தை நோக்கி தமிழகத்தை முன்னேற்றும் வகையில் “உங்க கனவ சொல்லுங்க” திட்டம் அமைந்துள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நெல்லை கிழக்கு மாவட்டத்தில் ‘பொங்கல் விழா!’

## மாவட்டப் பொறுப்பாளர் ம. கிரகாம்பெல் அறிக்கை!



நெல்லை. ஜன.11-

நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி,

கழக துணை பொதுச் செயலாளர், நாடாளுமன்றக் கழகக் குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களின் வழிகாட்டுதலின்படி நெல்லை கிழக்கு மாவட்டம் நாங்குநேரி மற்றும் இராதாபுரம் சட்ட மன்றத் தொகுதியில் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம் பெல் தலைமையில் ஜனவரி 12ம் தேதி நாங்குநேரி சட்டமன்ற தொகுதி கிருஷ்ணா புரம்,14 ஆம் தேதி இராதாபுரம் சட்ட மன்ற தொகுதி வள்ளியூர் கலையரங்கத்தில் வைத்து திராவிடப் பொங்கலிட்டு அனைத்து இல்லங்களிலும் சமத்துவம் பொங்கட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் என எழுதி கோலமிட்டு சிறப்பாக நடைபெற இருக்கிறது.

ஆகையால் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள் ஒன்றிய, நகர,பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, வளவனூர் பேரூராட்சி, நரையூர் சந்து, ரேஷன் கடை எண்: 3ல், விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புடன் (ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, வேட்டி, சேலை மற்றும் முழு கரும்புடன்) ரூ.3000 ரொக்கமாக வழங்கினார். உடன் வளவனூர் பேரூராட்சி மன்றத் தலைவர் மீனாட்சி ஜீவா, வளவனூர் பேரூராட்சி செயலாளர் பா.ஜீவா, பொதுக்குழு உறுப்பினர் TNJ.சம்பத் மற்றும் நகர கழக நிர்வாகிகள், மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், மாவட்ட, பேரூர் சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.